'ஆராரோ ஆரிரரோ, ஆணழகா கண் வளராய்

என்று பாட ஆரம்பித்து, தலைவர் கலைஞர் அவர்கள் அந்தப் போலீஸ்காரரின் கஷ்டங்களையெல்லாம் அந்தப் பாட்டிலே விளக்கிவிட்டு, கடைசியாக,

"காக்கி உடை போட்டுக்கிட்டு, சேப்புத்தொப்பி மாட்டிக்கிட்டு,
நாட்டைக் காக்கும் வீரனுக்கு, உன்னைப் போல நாலுவந்து பிறந்துவிட்டால்,
காவி உடை வேணுமடா, கமண்டலமும் தேவையடா,
கண்மணியே கண் வளராய்!"

என்று தனது குழந்தையைத் தாலாட்டி, நாட்டின் காவல் தெய்வமாக இருப்பதோடு, தனது காவல் தெய்வமாகவும் இருக்கிற அந்தக் காவலரின் கண்ணீர்க் கதையை அந்தப் பொன்னானவள் விவரிப்பதாக, தலைவர் கலைஞர் அவர்கள், அவர்களின் துயரை அன்றைக்கே உரைத்திருக்கிறார். எதிர்க்கட்சியிலே இருந்தபோதே தான் உணர்ந்த காவலர்களின் சங்கடங்களை ஆளும் கட்சியாக வந்தபோது, தீர்த்து வைத்தவர்தான் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள். அதனால்தான் இன்று காவல் துறையை கண் இமைபோல் காத்து வருகின்றார். அதேபோல, இத்துறையும் அவர் காலத்தில்தான் ஒளிரவும், மிளிரவும் செய்துகொண்டிருக்கிறது.

1969 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், காவல் துறையின் நிலைமைகளை ஆராய்ந்து பரிந்துரைக்க, திரு. ஆர்.ஏ. கோபால்சாமி, ஐ.சி.எஸ்., அவர்கள் தலைமையில் இந்தியாவிலேயே முதன்முறையாக ஓர் ஆணையத்தை அமைத்தார். அந்த ஆணையம் 131 பரிந்துரைகளை அளித்தது. அவற்றில் 105 பரிந்துரைகள் ஏற்கப்பட்டு, அவற்றை நடைமுறைப்படுத்தியவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அதேபோல 1989 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக முதலமைச்சரானபோது, முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் 2-வது போலீஸ் ஆணையத்தை அமைத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அந்தக் கமிஷன் பரிந்துரைத்த 115 பரிந்துரைகளில், 102 பரிந்துரைகளின்மீது முடிவெடுத்து, கழக ஆட்சி கலைக்கப்படுவதற்கு முன்பாக 89 பரிந்துரைகளை